***DEPOSITION OF WITNESS***
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM**

**CC No.116/2016**

**PW: 8**

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.சுரேஷ் | Taluk : | கும்பகோணம் |
| Father's Name : | திரு.அன்பழகன் | Calling : | LW3 |
| Village : | திருவலஞ்சுழி | Age : | 42 |

Solemnly affirmed by Thiru.X.Gilbert Maria Julian, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 29th day of June 2026.

Signature of Witness.

(Accused present. Assistant Public Prosecutor Grade I Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் திருவலஞ்சுழியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். 2016 ஆம் ஆண்டு தேதி மாதம் ஞாபகம் இல்லை காலை 7.00 மணியளவில் திருவலஞ்சுழி கடைத்தெருவில் நின்றுக் கொண்டிருந்தேன். திருவலஞ்சுழி மேலத்தெருவில் சரஸ்வதி என்ற அம்மா அடிப்பட்டார். கும்பகோணம் டூ பாபநாசம் ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தார். மேற்கிலிருந்து இருச்சக்கர வாகனத்தில் வந்தவர் சரஸ்வதி அம்மாள் மீது மோதிவிட்டார். சரஸ்வதி அம்மாளுக்கு பின்னந்தலையில் அடிப்பட்டது. அவர் மகன் கணேசன் என்பவருக்கு போன் மூலம் தகவல்

சொன்னோம். இருச்சக்கர வாகனத்தில் மோதிய நபரை நான் பார்க்கவில்லை. இருச்சக்கர வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. சரஸ்வதி அம்மாளை கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். ஒரு நாள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். அவருக்கு தலையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. நாங்கள் சென்று பார்ப்பதற்காக மாலை நானும் அய்யப்பன் என்பவரும் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்றோம். அங்கே அவர் இறந்து விட்டார். தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் போலீசார் என்னை விசாரித்து கையொப்பம் வாங்கினார்கள். என்னை இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

(சாட்சி தனது வாக்குமூலத்திலிருந்து பகுதியாக பிறழ்ந்து சாட்சியம் அளித்துள்ளதால் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரினார். குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>:

போலீசார் விசாரணையில் முருகதாஸ் என்பவர் டிவிஎஸ் ஜுபிடர் For Registration இருச்சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சரஸ்வதி அம்மாள் மீது மோதிவிட்டார் என்று கூறிவிட்டு தற்போது எதிரிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

**போலீசார் என்னை விசாரித்தபோது முதல் விசாரணையில் கூறிய அதே சங்கதிகளைத்தான் கூறினேன் என்றால் சரிதான்.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by her to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam.*